டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் வர மறுக்கிறார்கள். இன்று காலையில் கூட ரயில் நிலையத்தில் அவ்வாறு எனக்கு எந்த வாகனமும் கிடைக்கவில்லை. நான் ஒரு எம்.எல்.ஏ. என்று சொன்னாலும் கூட வர மறுத்துவிட்டார்கள். பிறகு ஒரு போலீஸ்காரரை அணுகி உதவி கேட்டதும், அவர் வந்து உதவி டாக்சி பிடித்து அனுப்பினார்...... (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் விளக்கங்கள் வேண்டாம். டாக்சி கிடைத்தது அல்லவா? போலீஸ்காரர் பிடித்து கொடுத்துவிட்டார் அல்லவா? இன்னமும் இதில் என்ன பிரச்னை. உட்காருங்கள்.

பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஜனதா இன்சூரன்ஸ் திட்டம்.

*வினா எண். 19—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஜனதா இன்சூரன்ஸ் திட்டம் அமுல் நடத்தப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) ஜனதா இன்சூரன்ஸ் திட்டத்தில் சேருவதற்கு 10 முதல் 65 வயதுக்குள்ளானவர்கள் தகுதியுடையவராவார்கள். ஆரம்ப காலத்தில் ஆண்டு சந்தா ரூ.10 வசூலிக்கப்பட்டது. அப்போது மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு நட்ட ஈட்டுத் தொகை ரூ. 10,000 ஆக இருந்து வந்தது. தற்பொழுது வருட சந்தா தொகை ரூ. 12 வசூலிக்கப்படுகிறது. தற்போது விபத்தில் மரணம் அடைந்தாலோ/இரண்டு கண்களும் சேதமடைந்தாலோ/இரு கைகள்/கால்கள் அல்லது ஒரு கால், ஒரு கை மற்றும் ஒரு கண் சேதமடைந்தாலோ ரூ. 15,000 நட்ட ஈட்டுத்தொகை வழங்கப்படுகிறது. தவிர ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் நிரந்தரமாக சேதமடைந்தாலோ ரூ. 7,500 நட்ட ஈட்டுத்தொகை பெற வழிவகையுள்ளது.



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS